# LOYOLA COLLEGE (AUTONOMOUS), CHENNAI – 600 034

**U.G.** DEGREE EXAMINATION – **LANGUAGES**

**SECOND** SEMESTER – **APRIL 2016**

**TL 2085 - GENERAL TAMIL - II**

Date: 15-04-2016 | Dept. No. | Max. : 100 Marks
Time: 01:00-04:00

**பகுதி - அ**

**விடையொன்றுக்கு 20 சொற்களில் எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க.** ( 10 X 2 = 20 )

01. இல்லறத்தாரின் கடமைகளாக கண்ணகி கோவலனிடம் கூறியன யாவை?
02. இராமன் மற்றும் வாலியின் உடன்பிறந்தோர் யாவர்?
03. இராவணன் பயின்ற இலக்கண, இலக்கியங்களின் பெயர்களைச் சுட்டுக.
04. ஒருவரையொருவர் காணாது நட்பு பாராட்டிய மன்னன் மற்றும் புலவரின் பெயர்களைத் தருக.
05. ‘நிலத்தினும் பெரிதே; வானினும் உயர்ந்தன்று;
நீரினு மாரள வின்றே’ இப்பாடல் அடிகள் காட்டும் தலைவனின் பண்புநலன்களை எழுதுக.
06. தேன்மயங்கு பாலினும் இனியது எது?
07. இரட்டைக் காப்பியங்கள் யாவை?
08. எட்டுத்தொகையில் இடம்பெற்ற புற இலக்கியங்களைக் காட்டுக.
09. எவையேனும் நான்கு நிறுத்தக் குறிகளை எழுதிக்காட்டுக.
10. பின்வரும் தொடரில் காற்புள்ளி இட்டு எழுதுக.
கபில பரணர் வள்ளுவர் இளங்கோவடிகள் ஒட்டக்கூத்தர் என்பார் தமிழ் மொழியில் அருந்தமிழ் நூல்கள் இயற்றியவர்களாவர்.

**பகுதி - ஆ**

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒன்றரைப் பக்க அளவில் விடையளிக்க.** ( 5 X 7 = 35 )

11. மணிமேகலைக் காப்பியம் காட்டும் ஐவேறு வனங்களின் தன்மைகளை விளக்குக.
12. ‘நட்பு’ என்னும் அதிகாரத்தின் வாயிலாக வள்ளுவர் கூறும் கருத்துகளைத் தொகுக்க.
13. நீரின் இன்றியமையாமைக் குறித்து ‘நீரும் நிலனும்’ என்னும் தலைப்பில் அமைந்த புறநானூற்றுப்பாடல் கூறுவன யாவை?
14. பெண்மையின் பெருமை பேசும் நற்றிணைப் பாடற் கருத்துகளைச் சுருக்கி வரைக.
15. பழமொழிகளின் வழி அறியவரும் மருத்துவக் கருத்துகளைத் தொகுக்க.
16. சமணர்தம் தமிழ்த்தொண்டினை உரைக்க.
17. நும் தெருவில் அமைந்துள்ள மின் விளக்குகளைப் பழுதுபார்க்க வேண்டி மாநகராட்சி ஆணையர்க்குக் கடிதம் வரைக.

**பகுதி - இ**

**மூன்று பக்க அளவில் விடையளிக்க.** ( 3 X 15 = 45 )

18. தாவீதன் கோலியாத்தை வெற்றிக்கொண்டதனைக் கட்டுரைக்க.

**( அல்லது )**

நும் பாடப்பகுதியில் இடம்பெற்ற பாலைக்கலிப் பாடல்கள் உணர்த்தும் வாழ்வியல் அறங்களைத் தொகுத்துரைக்க.

19. தற்காலக் கவிதைகள் சுட்டும் சுற்றுச்சூழல் சிந்தனைகளை ‘அறிவியல் தமிழ்’ நூல் கொண்டு விளக்குக.

**( அல்லது )**

சித்தர்களின் அறிவியல் சிந்தனைகளை நும் பாடப்பகுதியில் அமைந்த கட்டுரை வழித் தெரிவிக்க.

20. சைவ, வைணவ பக்தி இலக்கியங்களின் தனித்தன்மையினை விவரித்தெழுதுக.

**( அல்லது )**

திருக்குறளின் அமைப்பும் சிறப்பும் குறித்துக் கட்டுரைக்க.

**********